(ஒன்பதாவது பாராளுமன்றம் - இரண்டாவது கூட்டத்தொடர்)

**இல. 40.]**

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2022 யூன் 21 செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன,** சபாநாயகர்

**கௌரவ அஜித் ராஜபக்ஷ,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

---

**கௌரவ மஹிந்த அமரவீர,** கமத்தொழில் அமைச்சர் மற்றும் வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ நஸீர் அஹமட்,** சுற்றாடல் அமைச்சர்

**கௌரவ தினேஷ் குணவர்தன,** பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

**கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,** போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்

**கௌரவ நிமல் சிறிபால த சில்வா,** துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா,** கடற்றொழில் அமைச்சர்

**கௌரவ மனுஷ நாணாயக்கார,** தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண,** பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மற்றும் கைத்தொழில் அமைச்சர்

**கௌரவ நலின் பிரனாந்து,** வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) சுசில் பிரேமஜயந்த,** கல்வி அமைச்சர்

**கௌரவ பிரசன்ன ரணதுங்க,** நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

**கௌரவ கெஹெலிய ரம்புக்வெல்ல,** சுகாதார அமைச்சர் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) விஜயதாச ராஜபக்ஷ,** நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்

**கௌரவ விதுர விக்ரமநாயக,** புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ கஞ்சன விஜேசேகர,** மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர்

---

**கௌரவ ஏ. எல். எம். அதாஉல்லா**

**கௌரவ கபில அதுகோரல**

**கௌரவ சம்பத் அதுகோரல**

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி

கௌரவ ரோஹித அபேகுணவர்தன

கௌரவ அஸோக அபேசிங்ஹ

கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய

கௌரவ துஷார இந்துனில் அமரசேன

கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்

கௌரவ தவராஜா கலை அரசன்

கௌரவ லசந்த அலகியவன்ன

கௌரவ ஜே.சீ. அலவத்துவல

கௌரவ டலஸ் அழகப்பெரும

கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே

கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர

கௌரவ எம். உதயகுமார்

கௌரவ (கலாநிதி)(மேஜர்) பிரதீப் உந்துகொட

கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன

கௌரவ அகில எல்லாவல

கௌரவ லலித் எல்லாவல

கௌரவ செல்வராசா கஜேந்திரன்

கௌரவ கயந்த கருணாதிலக்க

கௌரவ சாகர காரியவசம்

கௌரவ பைஸால் காசிம்

கௌரவ ஜயந்த கெட்டகொட

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல

கௌரவ உதயன கிரிந்திகொட

கௌரவ லலித் வர்ண குமார

கௌரவ கெவிந்து குமாரதுங்க

கௌரவ (திருமதி) கீதா சமன்மலீ குமாரசிங்ஹ

கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி

கௌரவ அ. அரவிந்த் குமார்

கௌரவ வேலு குமார்

கௌரவ கருணாதாஸ கொடிதுவக்கு

கௌரவ மனோ கணேசன்

கௌரவ சிறிபால கமலத்

கௌரவ உதய கம்மன்பில

கௌரவ (டாக்டர்) உபுல் கலப்பத்தி

கௌரவ உதயகாந்த குணதிலக்க

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன

கௌரவ யதாமிணீ குணவர்தன

கௌரவ (கலாநிதி) நாலக கொடஹேவா

கௌரவ சிவநேசதுரை சந்திரகாந்தன்

கௌரவ சிசிர ஜயகொடி

கௌரவ மிலான் ஜயதிலக்க

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ

கௌரவ அநுராத ஜயரத்ன

கௌரவ பியங்கர ஜயரத்ன

கௌரவ (பேராசிரியர்) சன்ன ஜயசுமன

கௌரவ தயாசிறி ஜயசேக்கர

கௌரவ பிரேமலால் ஜயசேக்கர

கௌரவ குலசிங்கம் திலீபன்

கௌரவ ஜீவன் தொண்டமான்

கௌரவ சாமர சம்பத் தசநாயக

கௌரவ பியல் நிசாந்த த சில்வா

கௌரவ மொஹான் பிரியதர்ஷன த சில்வா

கௌரவ ஷான் விஜயலால் த சில்வா

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ அநுர திசாநாயக்க

கௌரவ துமிந்த திசாநாயக்க

கௌரவ (திருமதி) மஞ்சுலா திசாநாயக

கௌரவ மயந்த திசாநாயக்க

கௌரவ விமலவீர திசாநாயக்க

கௌரவ (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய

கௌரவ இசுரு தொடன்கொட

கௌரவ பிரேம்நாத் சி. தொலவத்த

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன

கௌரவ எச். நந்தசேன

கௌரவ (டாக்டர்) கயாஷான் நவனந்த

கௌரவ அசங்க நவரத்ன

கௌரவ வாசுதேவ நாணாயக்கார

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்

கௌரவ சனத் நிசாந்த

கௌரவ கிங்ஸ் நெல்சன்

**கௌரவ அனுப பஸ்குவல்**

**கௌரவ நிமல் பியதிஸ்ஸ**

**கௌரவ ஜகத் புஷ்பகுமார**

**கௌரவ டிலான் பெரேரா**

**கௌரவ நிரோஷன் பெரேரா**

**கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா**

**கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து**

**கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே**

**கௌரவ அசோக்க பிரியந்த**

**கௌரவ (திருமதி) முதிதா பிரிஸான்தி**

**கௌரவ சஜித் பிரேமதாச,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ உத்திக பிரேமரத்ன**

**கௌரவ ரோஹண பண்டார**

**கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார**

**கௌரவ (பேராசிரியர்) ரஞ்சித் பண்டார**

**கௌரவ சாந்த பண்டார**

**கௌரவ தாரக்க பாலசூரிய**

**கௌரவ விஜித பேருகொட**

**கௌரவ எஸ்.எம். மரிக்கார்**

**கௌரவ கே. காதர் மஸ்தான்**

**கௌரவ இம்ரான் மஹ்ரூப்**

**கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்**

**கௌரவ மொஹமட் முஸம்மில்**

**கௌரவ அநுர பிரியதர்ஷன யாபா**

**கௌரவ வசந்த யாப்பாபண்டார**

**கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க**

**கௌரவ (வண.) அதுரலியே ரதன தேரர்**

**கௌரவ பீ.வை.ஜீ. ரத்னசேக்கர**

**கௌரவ குமாரசிறி ரத்னாயக்க**

**கௌரவ சீ.பீ. ரத்நாயக்க**

**கௌரவ லொஹான் ரத்வத்தே**

**கௌரவ இஷாக் ரஹுமான்**

**கௌரவ முஜிபுர் ரஹுமான்**

**கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன்**

**கௌரவ ஹர்ஷண ராஜகருணா**

**கௌரவ குணதிலக ராஜபக்ஷ**

கௌரவ சமல் ராஜபக்ஷ

கௌரவ (டாக்டர்) திலக் ராஜபக்ஷ

கௌரவ நாமல் ராஜபக்ஷ

கௌரவ மஹிந்த ராஜபக்ஷ

கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ

கௌரவ (கலாநிதி) வீ. இராதாகிருஷ்ணன்

கௌரவ எம். ராமேஷ்வரன்

கௌரவ நிமல் லான்சா

கௌரவ வருண லியனகே

கௌரவ காமினி லொக்குகே

கௌரவ ஜானக வக்கும்புர

கௌரவ (திருமதி) பவித்ராதேவி வன்னிஆரச்சி

கௌரவ காமினி வலேபொட

கௌரவ இரான் விக்கிரமரத்ன

கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன

கௌரவ சமிந்த விஜேசிறி

கௌரவ எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான

கௌரவ மதுர விதானகே

கௌரவ ஹேஷா விதானகே

கௌரவ (பேராசிரியர்) திஸ்ஸ விதாரண

கௌரவ தேனுக விதானகமகே

கௌரவ ச. வியாழேந்திரன்

கௌரவ சந்திம வீரக்கொடி

கௌரவ விமல் வீரவங்ச

கௌரவ (சனாதிபதி சட்டத்தரணி) ஜயந்த வீரசிங்க

கௌரவ டீ. வீரசிங்க

கௌரவ வீரசுமன வீரசிங்ஹ

கௌரவ (கலாநிதி) சரத் வீரசேக்கர

கௌரவ திலிப் வெதஆரச்சி

கௌரவ குமார வெல்கம

கௌரவ சிவஞானம் சிறீதரன்

கௌரவ ஜகத் சமரவிக்ரம

கௌரவ ஜயந்த சமரவீர

கௌரவ தருமலிங்கம் சித்தார்தன்

கௌரவ ரன்ஜித் சியம்பலாபிடிய

**கௌரவ மைத்ரீபால சிறிசேன**

**கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி**

**கௌரவ வடிவேல் சுரேஷ்**

**கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன**

**கௌரவ செஹான் சேமசிங்க**

**கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ்**

**கௌரவ இந்திக அனுருத்த ஹேரத்**

**கௌரவ (பேராசிரியர்) சரித்த ஹேரத்**

**கௌரவ ஜயரத்ன ஹேரத்**

**கௌரவ டீ. பி. ஹேரத்**

**கௌரவ சமன்பிரிய ஹேரத்**

**கௌரவ மர்ஜான் பளீல்**

**கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா**

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திருமதி குஷானி ரோஹனதீர, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

1. ***சபாநாயகரின் அறிவித்தல்கள்:*** சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல் விடுத்தார்:—

**I**

“அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் உயர் நீதிமன்றத்தில் சவாலுக்கு உற்படுத்தப்பட்ட "அரசியலமைப்புக்கான இருபத்து ஓராவது திருத்தம்" எனத் தலைப்பிடப்பட்ட சட்டமூலம் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் தீர்மானம் எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ளதென்பதை பாராளுமன்றத்துக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

உயர் நீதிமன்றம் பின்வரும் தீர்மானத்தினை மேற்கொண்டுள்ளது:—

(i) சட்டமூலத்தின் 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 15, 23, 24, 26, 27, 28 மற்றும் 36 ஆம் வாசகங்கள் அரசியலமைப்பின் உறுப்புரை 4(ஆ) உடன் சேர்த்து வாசிக்கப்படும் உறுப்புரை 3 உடன் ஒவ்வாததாகவிருப்பதனால் அது உறுப்புரை 84(2) ஆல் தேவைப்படுத்தப்படுகின்றவாறாக விசேட பெரும்பான்மை மூலமும் உறுப்புரை 83 இன் பயனாக மக்கள் தீர்ப்பொன்றில் மக்களால் அங்கீகரிக்கப்படுவதன் மூலமும் மட்டுமே சட்டமாக்கப்படலாம்;

(ii) சட்டமூலத்தின் 2, 3, மற்றும் 4 ஆம் வாசகங்கள் அரசியலமைப்பின் உறுப்புரை 4 (உ) உடன் சேர்த்து வாசிக்கப்படும் உறுப்புரை 3 உடன் ஒவ்வாததாகவிருப்பதால், அது உறுப்புரை 84(2) ஆல் தேவைப்படுத்தப்படுகின்றவாறாக விசேட பெரும்பான்மை மூலமும் உறுப்புரை 83 இன் பயனாக மக்கள் தீர்ப்பொன்றில் மக்களால் அங்கீகரிக்கப்படுவதன் மூலமும் மட்டுமே சட்டமாக்கப்படலாம்;

(iii) சட்டமூலத்தின் 14 ஆம் வாசகம் தற்போது உள்ளவாறு அரசியலமைப்பின் உறுப்புரை 4(ஆ) உடன் சேர்த்து வாசிக்கப்படும் உறுப்புரை 3 உடன் ஒவ்வாததாகவிருப்பதால், அது உறுப்புரை 84(2) ஆல் தேவைப்படுத்தப்படுகின்றவாறாக விசேட பெரும்பான்மை மூலமும் உறுப்புரை 83 இன் பயனாக மக்கள் தீர்ப்பொன்றில் மக்களால் அங்கீகரிக்கப்படுவதன் மூலமும் மட்டுமே சட்டமாக்கப்படலாம்:

எனினும் சனாதிபதி தனது நியமத்தராக ஆள் ஒருவரை பேரவையின் உறுப்பினராக நியமிப்பதற்கு முன்மொழியப்பட்ட உறுப்புரை 41அ(1) ஏற்பாடு செய்யுமாயின், அத்துடன் அதில் குறிப்பிடப்பட்டுள்ள கருதப்படும் ஏற்பாட்டை நீக்குவதற்கு முன்மொழியப்பட்ட உறுப்புரை 41அ(6) பொருத்தமாகத் திருத்தியமைக்கப்பட்டால், மக்கள்தீர்ப்பின் அவசியம் இல்லாதொழியும்;

(iv) சட்டமூலத்தின் 19 ஆம் வாசகம் அரசியலமைப்பின் உறுப்புரை 4(ஆ) உடன் சேர்த்து வாசிக்கப்படும் உறுப்புரை 3 உடன் ஒவ்வாததாகவிருப்பதால், அது உறுப்புரை 84(2) ஆல் தேவைப்படுத்தப்படுகின்றவாறாக விசேட பெரும்பான்மை மூலமும் உறுப்புரை 83 இன் பயனாக மக்கள் தீர்ப்பொன்றில் மக்களால் அங்கீகரிக்கப்படுவதன் மூலமும் மட்டுமே சட்டமாக்கப்படலாம்;

(v) சட்டமூலத்தின் வாசகம் 30(அ) மக்களின் நீதித்துறைத் தத்துவத்தை வரையறுப்பதற்கு நாடுவதுடன், அதனால் அது அரசியலமைப்பின் உறுப்புரைகள் 4(இ) மற்றும் 4(உ) உடன் சேர்த்து வாசிக்கப்படும் உறுப்புரை 3 உடன் ஒவ்வாததாகவிருப்பதால், அது உறுப்புரை 84(2) ஆல் தேவைப்படுத்தப்படுகின்றவாறாக விசேட பெரும்பான்மை மூலமும் உறுப்புரை 83 இன் பயனாக மக்கள் தீர்ப்பொன்றில் மக்களால் அங்கீகரிக்கப்படுவதன் மூலமும் மட்டுமே சட்டமாக்கப்படலாம்;

(vi) சட்டமூலத்தின் 39 ஆம் வாசகம் அரசியலமைப்பின் உறுப்புரை 129(1) ஐ நீக்குவதற்கு நாடும் அளவுக்கு உள்ளதால் அரசியலமைப்பின் உறுப்புரை 4(இ) உடன் சேர்த்து வாசிக்கப்படும் உறுப்புரை 3 இற்கு ஒவ்வாததாகவிருப்பதால், அது உறுப்புரை 84(2) ஆல் தேவைப்படுத்தப்படுகின்றவாறாக விசேட பெரும்பான்மை மூலமும் உறுப்புரை 83 இன் பயனாக மக்கள் தீர்ப்பொன்றில் மக்களால் அங்கீகரிக்கப்படுவதன் மூலமும் மட்டுமே சட்டமாக்கப்படலாம்;

(vii) அரசியலமைப்பின் உறுப்புரை 4(ஆ) உடன் சேர்த்து வாசிக்கப்படும் உறுப்புரைகள் 2 மற்றும் 3 ஆகியவற்றுடன் சட்டமூலத்தின் 43 ஆம் வாசகம் ஒவ்வாததாகவிருப்பதால், அது உறுப்புரை 84(2) ஆல் தேவைப்படுத்தப்படுகின்றவாறாக விசேட பெரும்பான்மை மூலமும் உறுப்புரை 83 இன் பயனாக மக்கள் தீர்ப்பொன்றில் மக்களால் அங்கீகரிக்கப்படுவதன் மூலமும் மட்டுமே சட்டமாக்கப்படலாம்; மற்றும்

(viii)சட்டமூலத்தின் 51 ஆம் வாசகம் ஏனையவற்றுடன் பிரதம அமைச்சர் தவிசாளராக இருக்கும் தேசிய பாதுகாப்புப் பேரவை என்று தலைப்பிடப்பட்ட XIX-இ அத்தியாயத்தை அறிமுகப்படுத்துவதற்கு நாடுகின்றது; முன்மொழியப்பட்டுள்ள உறுப்புரைகள் 156ஒ (1) மற்றும் 156ஒ (2) ஆகியவை அரசியலமைப்பின் உறுப்புரை 4(ஆ) உடன் சேர்த்து வாசிக்கப்படும் உறுப்புரைகள் 1, 2 மற்றும் 3 ஆகியவற்றுடன் ஒவ்வாததாகவிருப்பதால், அது உறுப்புரை 84(2) ஆல் தேவைப்படுத்தப்படுகின்றவாறாக விசேட பெரும்பான்மை மூலமும் உறுப்புரை 83 இன் பயனாக மக்கள் தீர்ப்பொன்றில் மக்களால் அங்கீகரிக்கப்படுவதன் மூலமும் மட்டுமே சட்டமாக்கப்படலாம்;

எனினும், முன்மொழியப்பட்டுள்ள தேசிய பாதுகாப்புப் பேரவையின் ஆக்க அமைப்பை மாற்றுவதற்கு முன்மொழியப்பட்டுள்ள உறுப்புரைகள் 156 ஒ(1) மற்றும்156ஒ (2) ஆகியவை திருத்தப்பட்டு சனாதிபதி முன்மொழியப்பட்ட பேரவையின் தவிசாளராக நியமிக்கப்படின் அத்தகைய ஒவ்வாமை இல்லாதொழியும்.

உயர் நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு இன்றைய சபை கூட்ட நடவடிக்கைகளின் அதிகார அறிக்கையில் அச்சிடப்பட வேண்டும் என நான் கட்டளையிடுகின்றேன்."

**II**

“இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 79 ஆம் இலக்க உறுப்புரையின் பிரகாரம், 2022 யூன் 15 ஆம் திகதி ‘ இலங்கை மின்சாரம் (திருத்தம்)’ எனும் சட்டமூலத்தில் என்னால் சான்றுரை எழுதப்பட்டதென்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.”

**2. பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல்:** (1) சபாநாயகர், இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் பத்தாவது தொகுதியின் 2022 மே 13 ஆம் திகதி வரையில் அரசாங்க வைத்தியசாலைகளில் காணப்படுகின்ற மருந்துகளின் பற்றாக்குறை மற்றும் அந்த பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் விசேட அறிக்கையின் - III ஆம் பகுதியைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனவும் அச்சிடப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

(2) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் —

(i) 2021 ஆம் ஆண்டுக்கான அரச நிதித் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கை;

(ii) 2021 ஆம் ஆண்டுக்கான அரசாங்க சேவை ஆணைக்குழுவின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை; மற்றும்

(iii) 2021 ஆம் ஆண்டுக்கான நிதி ஆணைக்குழுவின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கைகள் **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(3) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் —

(i) 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் செஸ் வரி தொடர்பாக வர்த்தக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 மார்ச் 10 ஆம் திகதிய 2270/59 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளைகள்;

(ii) 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் செஸ் வரி தொடர்பாக சனாதிபதியினால் விதிக்கப்பட்டு, 2022 மே 18 ஆம் திகதிய 2280/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை

(iii) 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் மற்றும் 5 ஆம் பிரிவுகளின் கீழ் விசேட வர்த்தகப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு 2022 மார்ச் 03 ஆம் திகதிய 2269/48 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை;

(iv) 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு 2022 மார்ச் 03 ஆம் திகதிய 2269/56 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை;

(v) 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு 2022 மார்ச் 09 ஆம் திகதிய 2270/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை;

(vi) 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு 2022 மார்ச் 28 ஆம் திகதிய 2273/01 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை;

(vii) 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு 2022 ஏப்ரல் 13 ஆம் திகதிய 2275/02 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை;

(viii) 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியினால் விதிக்கப்பட்டு 2022 மே 18 ஆம் திகதிய 2280/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை; மற்றும்

(ix) (அத்தியாயம் 235) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் இறக்குமதித் தீர்வை வரி தொடர்பான தீர்மானம்

(2022 மார்ச் 09 ஆம் திகதிய 2270/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை )

சமர்ப்பித்து அக்கட்டளைகள் மற்றும் தீர்மானம் அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர், 2021 ஆம் ஆண்டுக்கான பாராளுமன்றச் சபை முதல்வர் அலுவலகத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(5) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சிவில் விமான சேவைகள் சட்டத்தின் 66 மற்றும் 69 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 117 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து மற்றும் குடியியல் வான்செலவு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 யூலை 03 ஆம் திகதிய 2078/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மற்றும் அவ் வர்த்தமானப் பத்திரிகையில் அச்சுப் பிழைகள் திருத்தப்பட்டு, 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சிவில் விமான சேவைகள் சட்டத்தின் 66 மற்றும் 69 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 117 ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 யூன் 06 ஆம் திகதிய 2283/05 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளைகளை சமர்ப்பித்து அக்கட்டளையை துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(6) போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2018 ஆம் ஆண்டுக்கான இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கையை வெகுசன ஊடக அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(7) புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்—

(i) 2021 ஆம் ஆண்டுக்கான தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை.

(ii) 2021 ஆம் ஆண்டுக்கான கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை.

ஆகியவற்றைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கைகள் **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

3. **குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல்: :** (1 ) நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் தவிசாளர் கௌரவ (கலாநிதி) விஜயதாஸ ராஜபக்ஷ அக்குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட —

(i) 1979 ஆண்டின் 15 இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம்;

(ii) சிவில் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை(திருத்தம்) சட்டமூலம்;

(iii) 2018 ஆம் ஆண்டிற்கான இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை;

(iv) 2020 ஆம் ஆண்டுக்கான மீயுயர் நீதிமன்றங்களின் கட்டிடத் தொகுதி முகாமை சபையின் வருடாந்த அறிக்கை; மற்றும்

(v) 2018 ஆம் ஆண்டுக்கான காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் ஆண்டறிக்கை

தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

அவ்வறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(2) தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் தவிசாளர் கௌரவ மனுஷ நாணாயக்கார அக்குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட கைத்தொழிற் பிணக்குகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

அவ்வறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(3) அரசாங்க நிதி பற்றிய குழுவின் தவிசாளர் கௌரவ அநுர பிரியதர்ஷன யாப்பா அக்குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட இலங்கையில் பெருந்தோட்டப் பயிர்கள் மீதான கிளைபோசேற் பாவனை தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

அவ்வறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

4. **பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

(i) கொழும்பு 10, ஸ்ரீ வஜிரஞான மாவத்தை, இல. 11/1/1 இல் வதியும் திரு. ஜி.கே.என்.எம். விஜேசிங்கவினது 2021.12.20 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) வரகாபொல, சமகி இடம், அம்பகல வீதியில் வதியும் திரு. எல்.பி.ஆர்.எஸ். விஜேதுங்கவினது 2022.02.28 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iii) யட்டியந்தோட்ட, வீ ஒய, கொட்டுவேகெதர எனும் முகவரியில் வதியும் திரு. எம். வில்மட் பெரேராவினது 2022.02.06 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(iv) அவிசாவளை, நாப்பாவல, இல. 169/1 இல் வதியும் திருமதி எம்.எஸ். உம்மு சுஹைராவினது 2022.03.07 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ ரன்ஜித் சியம்பலாபிட்டிய சமர்ப்பித்தார்.

மேற்படி மனுக்கள் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30(10) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**5. குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தம்):** நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் பின்வரும் சட்டமூலத்தைச் சமர்ப்பித்தார்,— 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

சட்டமூலம் 2022 யூலை 04 ஆம் திகதி திங்கட்கிழமை இரண்டாவது முறையாக மதிப்பிடப்பட வேண்டுமெனவும் அச்சிடப்பட வேண்டுமெனவும், சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

**6. குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம்** : இரண்டாம் மதிப்பீட்டுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

"இச்சட்டமூலம் இப்பொழுது இரண்டாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக"என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன் பிரகாரம் சட்டமூலம் இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெற்றது.

"சட்டமூலம் முழுப்பாராளுமன்றக் குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக" என நெடுஞ்சாலைகள் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடனே பாராளுமன்றம் குழுவாக மாறியது.

(குழுவில்)

சபாநாயகர் தலைமை தாங்கினார்.

1 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2 ஆம் வாசகம்

2 ஆம் பக்கத்தில் 20 ஆம் வரியை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்:—

" நிலைபெயர் கால ஏற்பாடுகள்

3. இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவிலும் சான்றுக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளிலும் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியன்று முடிவுறாதுள்ள ஏதேனும் வழக்கில் அல்லது மேன்முறையீட்டில்-

(அ) (i) எதிர்க்கின்ற திறத்தவர் உறுதி அல்லது ஆவணம் சான்றில் அளிக்கப்படுவதன்மீது அதனைச் சான்றாகப் பெறுவதனை ஆட்சேபிக்காவிடின் அல்லது ஆட்சேபித்திருக்காவிடின்ளூ அல்லது

(ii) எதிர்க்கின்ற திறத்தவர் உறுதி அல்லது ஆவணம் சான்றில் அளிக்கப்படுவதன்மீது அதனைச் சான்றாகப் பெறுவதனை ஆட்சேபித்திருப்பின் ஆனால் அந்த ஆவணம் சான்றில் வாசிக்கப்படும் போது ஒரு வழக்கின் முடிவில் அதனை ஆட்சேபித்திருக்காவிடின்,

நீதிமன்றமானது, மேலதிக எண்பிப்பைத் தேவைப்படுத்தாமல் அத்தகைய உறுதியை அல்லது ஆவணத்தைச் சான்றாக ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(ஆ) எதிர்க்கின்ற திறத்தவர் சான்றாக அதனைப் பெறுவதனை ஆட்சேபிப்பின் அல்லது ஆட்சேபித்திருப் பின், நீதிமன்றமானது, அத்தகைய உறுதியின் அல்லது ஆவணத்தின் நிறைவேற்றுகை அல்லது மெய்யான தன்மை தொடர்பாக எடுக்கப்பட்ட ஆட்சேபனைகளின் நற்கூறுகளைக் கவனத்துட்கொண்டு அத்தகைய ஏதேனும் உறுதியினது அல்லது ஆவணத்தினது நிறைவேற்றுகையின் அல்லது மெய்யானதன்மையின் விதிமுறைப்பட்ட எண்பிப்பைச் சமர்ப்பித்தலானது, விடயத்துக்கேற்ப, அவசியமாகவுள்ளதா அல்லது அவசியமாகவிருந்ததாவென்பதை முடிவு செய்யலாம்.".

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

3 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும்:

"சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற" பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் திருத்தங்களுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

"சட்டமூலம் இப்பொழுது திருத்தப்பட்டவாறு மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக" என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதன்படி சட்டமூலம் திருத்தப்பட்டவாறு மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெற்று நிறைவேற்றப்பட்டது.

**7. குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம்**: இரண்டாம் மதிப்பீட்டுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

"இச்சட்டமூலம் இப்பொழுது இரண்டாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக" என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன் பிரகாரம் சட்டமூலம் இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெற்றது.

"சட்டமூலம் முழுப்பாராளுமன்றக் குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக" என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடனே பாராளுமன்றம் குழுவாக மாறியது.

(குழுவில்)

சபாநாயகர் தலைமை தாங்கினார்.

1 முதல் 4 வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும்:

"சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற" பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் திருத்தங்களின்றி ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

"சட்டமூலம் இப்பொழுது மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக" என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதன்படி சட்டமூலம் மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெற்று நிறைவேற்றப்பட்டது.

**8. கைத்தொழிற் பிணக்குகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம்**: இரண்டாம் மதிப்பீட்டுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

"இச்சட்டமூலம் இப்பொழுது இரண்டாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக"என தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் பிரேரித்தார்.

(பி.ப. 12.22 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

"கௌரவ சாந்த பண்டார தலைமை தாங்குவாராக" என கௌரவ நாலக கொடஹேவா முன்மொழிய அதனை கௌரவ ஜயரத்ன ஹேரத் வழிமொழிந்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 1.58 மணிக்கு கௌரவ சாந்த பண்டார தலைமை தாங்கினார்.)

"கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன் தலைமை தாங்குவாராக" என கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன முன்மொழிய அதனை கௌரவ அஸங்க நவரத்ன வழிமொழிந்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 2.15 மணிக்கு கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன் தலைமை தாங்கினார்.)

(பி.ப. 3.25 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன் பிரகாரம் சட்டமூலம் இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெற்றது.

"சட்டமூலம் முழுப்பாராளுமன்றக் குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக" என தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடனே பாராளுமன்றம் குழுவாக மாறியது.

(குழுவில்)

பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.

1 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2 ஆம் வாசகம்

2 ஆம் பக்கத்தில் 9 முதல் 12 வரையிலான வரிகளை ( இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை உட்புகுத்துமாறு தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்:—

"2. (1) (131 ஆம் அத்தியாயமான) கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்தின் 31அ என்னும் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட ஒவ்வொரு தொழில் நியாயசபையும், எழுத்திலான சட்டத்தினால் அளிக்கப்பட்ட தத்துவங்கள் மற்றும் கடமைகளுக்கு";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2 ஆம் பக்கத்தில் 1 முதல் 3 வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை உட்புகுத்துமாறு தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:—

"சட்டவாக்கங்களினதும் இதுவரை இடைநேர்விளைவான ஏற்பாடுகளையும் நடைமுறைப்படுத்தும் நோக்கத்துக்காக நீதிவானொருவருக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகித்தல் வேண்டும்.";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2 ஆம் பக்கத்தில் 4 ஆம், 5 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை உட்புகுத்துமாறு தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:—

"(2) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, மேலே குறிப்பிடப்பட்டவாறு ஒரு தொழில் நியாயசபையின் நியாயாதிக்கம், (3) ஆம் உட்பிரிவின்";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

12 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை உட்புகுத்துமாறு தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:—

"செய்யப்பட்ட ஒரு தொழில் நியாயசபையின் ";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

20 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை உட்புகுத்துமாறு தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:—

"பட்டவாறானவையும் இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழான தத்துவங்கள் தவிர்ந்தனவையுமான அத்தகைய வேறு தத்துவங்களைப் பிரயோகித்தலைத் தொடரு'';

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

3 ஆம் வாசகம்

2 ஆம் பக்கத்தில் 22 ஆம், 23 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை உட்புகுத்துமாறு தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்:—

"3. (1) அட்டவணை II இன் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்ட ஒரு தொழில் நியாயசபையொன்றின் தலைவர், (131 ஆம் அத்தியாய" ;

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

3 ஆம் பக்கத்தில் 4 ஆம் வரியை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துமாறு தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:—

"(2) இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் குறித்துரைக்கப்பட்ட பணிகளை நடைமுறைப்படுத்தும் நோக்கத்துக்காக முறையாக நியமிக்கப்பட்ட பதிவாளரொருவரும் இடைநேர்விளைவான பணியாட்டொகுதியினரும் இருத்தல் வேண்டும்.";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

4 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அட்டவணை I

6 ஆம் பக்கத்தில் அட்டவணை I இன் 49 ஆம் விடயத்தை நீக்கிவிடுமாறு தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"அட்டவணை திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அட்டவணை II ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமாக்கு வாசகம்

1 ஆம் பக்கத்தில் 1 ஆம் மற்றும் 2 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை உட்புகுத்துமாறு தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்:—

"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:"

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற" பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

விரிவுப்பெயர்

விரிவுப் பெயரை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை உட்புகுத்துமாறு தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்:—

"குறித்துரைக்கப்பட்ட சட்டவாக்கங்களினது ஏற்பாடுகளின் கீழான எல்லா வலுவுறுத்தல் வழக்குநடவடிக்கைகளையும் குற்றவழக்குகளையும் கேட்பதற்கும், விளக்குவதற்கும், தீர்மானிப்பதற்கும் மற்றும் கையுதிர்ப்பதற்கும் தொழில் நியாயசபைகளுக்குத் தத்துவமளிப்பதற்கு விசேட ஏற்பாடுகளைச் செய்வதற்கும் மற்றும் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்காக ஏற்பாடுசெய்தற்குமானதொரு சட்டம்."

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"விரிவுப்பெயர் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் திருத்தங்களுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

"சட்டமூலம் இப்பொழுது மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக" என தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதன்படி சட்டமூலம் திருத்தங்களுடன் மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெற்று நிறைவேற்றப்பட்டது.

**9. ஒத்திவைப்பு (நெருக்கடியான சூழ்நிலையில் கல்விக்கான தடைகளை நீக்குதல்):** "இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக" என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

"கௌரவ பிரேம்நாத் சீ. தொலவத்த தலைமை தாங்குவாராக" என கல்வி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 4.38 மணிக்கு கௌரவ பிரேம்நாத் சீ. தொலவத்த தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பாராளுமன்றம் பி.ப. 5.05 மணிக்கு சபைக்குத் தலைமை தாங்கும் உறுப்பினரால் 2022 யூன் 22 ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 10.00 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.